பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 02 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. இளையோருக்கு வேலைவாய்ப்பு அளிக்க பல்வேறு கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ரயில் பெட்டிகளை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. வளர்ந்து வரும் நாடுகளின் குரலாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷில் சட்டம் — ஒழுங்கை பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று பங்களாதேஷ் தேசியவாத கட்சித் தலைவர் திரு தாரிக் ரஹ்மான் கூறியுள்ளார்.

5. புனே சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா — ஸ்ரீவள்ளி ராஷ்மிகா இணை பட்டம் வென்றது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>>

இளையோருக்கு வேலைவாய்ப்பு அளிக்க பல்வேறு கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தியில் 5 ஆயிரத்து 450 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைத்து பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக கடந்த 11 ஆண்டுகளில் ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் நான்கு நகரங்களில் 225 மின்னணு பேருந்து சேவைகளை பிரதமர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

குவஹாத்தியில் 100 பேருந்துகளும், நாக்பூர் மற்றும் பாவ் நகரில் தலா 50 பேருந்துகளும், சண்டிகரில் 25 பேருந்து சேவைகளும் இன்று தொடங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், பிரம்மபுத்திரா நதிக்கு குறுக்கே 3 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான குமார் பாஸ்கர் வர்மா பாலத்தை பிரதமர் திறந்துவைத்தார்.

<<<<<<<>>>>>>>

தில்லி, ஹரியானா, மகாராஷ்ட்ரா, கர்நாடகா மாநிலங்களை சேர்ந்த **12** மாவட்டங்களில் ரயில் இருவழிப்பாதை திட்டங்களுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**18** ஆயிரத்து **509** கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டம் மூலம், **Kasara — Manmad,** தில்லி — அம்பாலா, **Ballari — Hosapete** இடையே மூன்றாவது மற்றும் நான்காவது ரயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் வழித்தட விரிவாக்கம் வரும் **2031-**ஆம் ஆண்டுக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம், **2** கோடியே **65** லட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

ரயில் பெட்டிகளை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பயணிகளின் வசதிக்காக ரயில் பெட்டிகளை பராமரிப்பதற்கான

ஆணைகள் ஏற்கனவே சிறப்பாக செயல்பட்ட நிறுவனங்களுக்கே வழங்கப்படும் என்று கூறினார்.

அடுத்த மூன்றாண்டுகளில் 124 ரயில் சரக்கு முனையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதல் வகுப்பு ரயில் பெட்டிகள் போல், சாதாரண வகுப்பு பெட்டிகளையும் தூய்மையாக பராமரிப்பதற்கென சிறப்பு பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

முதல்கட்டமாக 80 ரயில்களில் இந்த தூய்மை பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நகர்ப்புற மேம்பாட்டு நிதிக்காக ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்ட இந்த திட்டம் மூலம், அடுத்த ஐந்தாண்டுகளில் நான்கு லட்சம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்க முடியும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நகர்ப்புற வளர்ச்சிக்காக இத்திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

வளர்ந்து வரும் நாடுகளின் குரலாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொதுமக்களின் அடிப்படை வசதிகளின் மேம்பாட்டுக்காக தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சமூக வலைதளம் மற்றும் கைபேசிகளை கட்டுபாடுகளுடன் பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும் என்று இளைஞர்களுக்கு அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, இணையதள சூதாட்டத்தை ஒழிக்க கடும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

இதன்மூலம், பல்வேறு குடும்பங்கள் நிதி நெருக்கடியிலிருந்தும், இணையதள மோசடியில் இருந்தும் பாதுகாக்கப்பட்டுள்ளதாக திரு ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் கொல்லம் ரயில் நிலையத்தில், ஐந்தடுக்கு வாகன நிறுத்தும்  இடத்தை இன்று திறந்துவைத்து பேசிய அவர், கேரளா உட்பட நாடு முழுவதும் உள்ள ரயில் நிலையங்களை நவீன மயமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

இந்த வாகன நிறுத்துமிடத்தில் 200 இருசக்கர வாகனங்களும், 130 கார்களும் நிறுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக திரு சுரேஷ் கோபி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பங்களாதேஷில் சட்டம் — ஒழுங்கை பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று பங்களாதேஷ் தேசிய கட்சி தலைவர் திரு தாரிக் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

டாக்காவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய அமைச்சரவை வரும் 18-ஆம் தேதிக்குள் அமைக்கப்படும் என்று கூறினார்.

பங்களாதேஷில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்றதையடுத்து, முதல் முறையாக செய்தியாளர்களை சந்தித்த திரு தாரிக் ரஹ்மான், வன்முறை சம்பவங்களை தடுக்க அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

தேசிய நலனுக்காக அனைத்துக்கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்த வெற்றி மக்களின் வெற்றி என்றும், ஜனநாயகத்தின் வலிமையை இது பிரதிபலிப்பதாக அவர் கூறினார்.

பங்களாதேஷில் 299 தொகுதிகளுக்கு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி 209 தொகுதிகளிலும், பங்களாதேஷ் ஜமாத் — ஈ - இஸ்லாமி கட்சி 68 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

<<<<<<<>>>>>>>

மத்திய அரசின் தீன் தயாள் உபாத்யாயா ஊரக வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின்கீழ், தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம் பாய்ச்சல் தனியார் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாம் மூலம் தாங்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாக இதில் கலந்துகொண்ட பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***(Sound Byte — பயனாளிகள் - 50 Sec.)***

<<<<<<<>>>>>>>

தீவிரவாதத்தை ஒடுக்க உறுதிபூண்டிருப்பதாக மத்திய ரிசர்வ் காவல் படை தலைமை இயக்குநர் திரு **Gyanendera Pratap Singh** தெரிவித்துள்ளார்.

புல்வாமா தீவிரவாத தாக்குதலின் **7**-ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்புப் படையினர் தீவிரவாதத்துக்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்படுவார்கள் என்று கூறினார்.

ஜம்மு காஷ்மீரின் புல்வாமாவில் கடந்த **2019**-ஆம் ஆண்டு இதேநாளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் **40** மத்திய ரிசர்வ் காவல் படை வீரர்கள் உயிரிழந்தனர்.

<<<<<<<>>>>>>>

ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், **Munich** பாதுகாப்பு மாநாட்டின் அடிப்படையில், அமெரிக்கா — ஐரோப்பிய நாடுகளுக்கு இடையேயான ராணுவ ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இதனிடையே, வட அட்லாண்டிக் பெருங்கடலில் பிரிட்டனின் **HMS Prince of Wales** போர் கப்பல் அனுப்பப்படும் என்று பிரிட்டன் பிரதமர் திரு **Keir Starmer** தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா நட்பு நாடு என்ற போதிலும், ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

புனே சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா — ஸ்ரீவள்ளி ராஷ்மிகா இணை பட்டம் வென்றது.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **7-6, 6-3** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Misaki Matsuda — Eri Shimizu** இணையை வென்றது.

------------------------

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஹர்மீத் தேசாய் — **Yashaswini Ghorpade** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **11-9, 11-6, 11-9** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Payas Jain — Syndrela Das** இணையை வென்றது.

-------------

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பிரமோத் பகத் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

பஹ்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-12, 21-18** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Mohammed Al Imran**-ஐ வென்றார்.

-----------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டி இன்று தொடங்கியது.

--------------

புரோ ஹாக்கி லீக் போட்டியில், இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

<<<<<<<<**END**>>>>>>>>